[திரு. செ. அரங்கநாயகம்] [1979 மார்ச் 16

இக்கல்லூரி மாணவப் பேரவைத் தலைவர் தாக்கப்பட்டார். இச் சம்பவம் குறித்து ஆய்ந்தறிய ஆசிரியர் குழு ஒன்று நியமிக்கப் பட்டது. இக்குழுவின் புலனாய்வின் முடிவில், தாக்கிய இரு மாணவர்களும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டுள்ளனர். கல்லூரி மாணவத் தலைவர் இம்முடிவிற்கு இணங்கியுள்ளார்.

. இசசம்பவத்தில் ஈடுபட்ட வெளிநபர் குறித்துத் தக்க நடவடிக்கை எடுக்கக் கல்லூரியால் இயலாததால் காவல்துறைக் குப் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. இப்புகார் குறித்துக் காவல் துறை அலுவலர்கள் ஆய்ந்து வருகின்றனர்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. பொ. விஜயராகவன்: இந்தக் கல்லூரி மாணவர் தலைவரை வெளியார் தாக்கியிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள்மீது காவல் துறையினரிடம் புகார் கொடுத்திருப்பதாகவும் சொன்னார்கள். அப்படிக் கொடுத்த புகார் மீது காவல் துறையினர் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதற்கு ஏதாவது தகவல் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதை ஆய்த்து வருவதாக தகவல் கிடைத்திருக்கிறது.

திரு. த. ஆறுமுகம்: அரியலூர் அரசினர் கலைக் கல்லூரி மாணவர் தலைவர் ராஜேந்திரனைத் தாக்கியவர்கள் வெளியார் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த வெளியார் ஆளும் கட்சியைச் சார்ந்தவர். ஆகவே அங்குள்ள காவல் துறை அதிகாரிகள் அவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே அரசாங்கம் அவரை உடனடி யாக கைது செய்து அவருக்கு தண்டனை கொடுக்க முன் வருமா என்பதைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவர் எந்தக் கட்சியாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும். காவல் துறைக்கு புகார் தரப்பட்டு அந்தப் புகார்மீது காவல்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது என்றுதான் பதில் கூறினேன்.

(ஆ) கிழக்கு இராமநாதபுரம், உள்ளாட்சித் துறை பணி யாளர்களுக்கு 'அடடா' வழங்காமல் இருப்பது குறித்து.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, ''புயலால் பாதிக்கப்பட்ட கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு 'அடடா' வழங்கியும், உள்ளாட்சித் துறைப் பணியாளர்களுக்கு வழங்காமலும் இருப்பதால், அவர்கள்

1979 மார்ச் 16] [திரு. செ. சிவசாமி]

சென்னை தலைமைச் செயலகம் முன்பு உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, கட்டாய சேமிப்பு நிதியை திருப்பி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவு கிழக்கு முகவை மாவட்டத்தில் பணி புரியும் அலுவலர்களுக்கு மட்டும் பயனளிப்பதால், புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவிக்கப்பட்ட மாவட்ட முழுமைக்கும் இவ்வுத்தரவைனைச் செயல்படுத்த தகுந்த ஆணை பிறப்பிக்குமாறு மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார். மாவட்ட ஆட்சியரின் கருத்துரு நிதித்துறைக்கு இத்துறையின் பரிந்துரையுடன் வருவாய்த் துறை மூலமாக தக்க மேல்நடவடிக்கைக்காக அனுப்பப் பட்டுள்ளது. மேலும் சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் ஆசிரியர் மேற்கொண்ட உண்ணா விரதம் அரசின் மறு உத்தரவை எதிர்நோக்கி நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

திரு. செ. சிவசாமி: இந்தப் பணம் அவர்களின் சொந்தப் பணம். அவர்களின் சொந்தப் பணத்தை ஏற்கனவே இருந்த அரசாங்கம் வலுக்கட்டாயமாகப் பிடுங்கி, வலுக்கட்டாயமாக அவர்கள் கையிலிருந்து பிடுங்கிக் கொண்ட அந்தப் பணத்தைத் திருப்பிக் கேட்கிறார்கள் அவர்கள். அந்தப் பணத்தைக் கொடுப்பதற்குக்கூட அரசு இந்த அளவிற்கு தாமதப்படுத்திக் கொண்டு வருகிறது. ஏற்கனவே தேர்தல் காலத்தில் மத்திய அரசும் சரி, மாநில அரசும் சரி மக்களிடம் சொல்லும்போது நிச்சயமாக உபாத்தியாயர்களுக்கு ஏற்படக்கூடிய இந்த நிலையைப் போக்கி, அவர்களுக்கு நிச்சயமாக இந்த ரூபாயை வாங்கிக் கொடுப்போம் என்று உறுதி சொன்னார்கள். அப்படி உறுதியளித்ததற்குப் பிறகும்கூட அவர்களிடமிருந்து வாங்கிய ரூபாயைத் திருப்பிக் கொடுக்க காலதாமதம் ஏற்படுகிறது. மத்திய அரசு உத்தரவிட்டாலும் மாநில அரசு சரியானபடி செயல்படாத காரணத்தால் இன்றைக்கு ஒரு பகுதியினர் வாங்கியும் ஒரு பகுதியினர் வாங்காமலும் இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. உதாரணமாக ஒரு உபாத்தியாயர் இந்தப் பணத்தைத் திருப்பி வாங்குவதில் உள்ள கஷ்டத்தைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். 23—3—1978-ல் அப்ளிகேஷன் போட்டு இன்னும் பணம்கிடைக்கவில்லை. 7—3—1979-ல் அவர் சென்னைக்கு வருகிறார். வந்து அலுவலகத்திற்குச் சென்று கேட்கிறார் அதைப் பற்றி. என் பணம் என்னவாயிற்று என்று கேட்கிறார். கிட்டத்தட்ட ரூ.450-க்கு ரிக்கார்ட் இல்லை என்று சொல்கிறார்கள். அதைக்

கட்டியிருப்பதாக உபாத்தியாயர் சொல்கிறார். ரிக்கார்ட்ஸ் இல்லை என்று சொன்னால் நான் என்ன செய்வது என்று கேட்கிறார். நீங்கள் நேரடியாக மாநில கூட்டுறவு வங்கிக்குப் போனால் அங்கு ரிக்கார்ட் இருக்கிறது. அதை எடுத்துக் கொண்டு ஸ்டேட் பாங்க்கு போங்கள். அங்கு ரிக்கார்ட் இருக்கிறது. அதை எடுத்துக் கொண்டு வவுச்சருடன் வாருங்கள், அதை வைத்து பணம் இருந்தால் பணம் தருகிறேன் என்று சொல்லக் கூடிய அளவிற்கு நிலைமை மோசமாயிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ட்ரெயினிலிருந்து புறப்பட்டது முதற்கொண்டு வரிசையாகச் சொல்கிறீர்கள். சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. செ. சிவசாமி: அவர்களுக்குள்ள கஷ்டத்தைப் பற்றிச் சொல்கிறேன்.

[முற்பகல் 10-40].

அந்த உபாத்தியார்களுக்கு உதவி செய்யும் முறையில் அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும், அதற்கான நடவடிக்கைகளை வேகமாக எடுக்க அரசு ஏற்பாடு செய்ய முடியுமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இந்த ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ் நாடு, 1978 ஆம் ஆண்டு நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, ''தமிழ் நாடு 1978-ஆம் ஆண்டு நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு*(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்'' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

*திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டுவந்திருக்கின்ற இந்த மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களை சொல்ல விழைகிறேன். பொது இடங்களில் எல்லாம் ஆபாச

** 1978 அம் ஆண்டு ஆகஸ்டு 31ஆம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.